ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2355/11 - 2023 ඔක්තෝබර් මස 23 වැනි සඳුදා - 2023.10.23

2355/11 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி அமைச்சின் இலக்கம்: 3/1/84/E/329.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத் தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தெல் தோட்ட பிரதேச செயலாளர் பிரிவில் ஹேவாவிஸ்ஸ கோரளை சிறு பிரிவில் வெடகேபொத கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் அளவை செய்யப்பட்ட க 3480 இலக்கமுடைய ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1 மற்றும் 2 ஆகிய காணித்துண்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 0.623 ஹெக்டயார் விஸ்தீரணம் உள்ள கீழ்க் காணும் காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**துண்டு இல. 01 - காணியின் பெயர்: மெதகேகில; உரிமை கோருவோர்: எம். ஐ. சனுன்தீன், (இல. 339/பீ, பள்ளேகம, தெல்தோட்ட), ஐ. எம். புகாரி, (மன்னார் பாதை, புத்தளம்), எஸ். எம். அக்பர், (மன்னார் பாதை, புத்தளம்), எஸ். ஜெஸீமா, (இல. 202, நீலவள பாதை, உடுதெனிய, மாரஸ்ஸன), எஸ். எம். லதிப், (இல. 216, வனஹுபுவ, தெல்தோட்ட), எஸ். தாகிரா, (அம்ப கொடுவ, பீலிகரை, தெல்தோட்ட), ஏ. டபிள்யூ. சித்தி வசீரா, (இல. 166/1, வனஹுபுவ, தெல்தோட்ட), ஏ. டபிள்யூ. அல் அமீன், (இல. 166/1, வனஹுபுவ, தெல்தோட்ட); விஸ்தீரணம்: 0.118 ஹெக்டயார்.**

வடக்கு: மெதகேகில மற்றும் கம்சபா வீதி; கிழக்கு: கம்சபா வீதி; தெற்கு: காணித்துண்டு இலக்கம் 2; மேற்கு: மெதகேகில.

**துண்டு இல. 02 - காணியின் பெயர்: மெதகேகில; உரிமை கோருவோர்: எம். ஐ. சனுன்தீன், (இல. 339/பீ,**



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பள்ளேகம, தெல்தோட்ட), ஐ. எம். புகாரி, (மன்னார் பாதை, புத்தளம்), எஸ். எம். அக்பர், (மன்னார் பாதை, புத்தளம்), எஸ். ஜெஸீமா, (இல. 202, நீலவள பாதை, உடுதெனிய, மாரஸ்ஸன), எஸ். எம். லதிப், (இல. 216, வனஹபுவ, தெல்தோட்ட), எஸ். தாகிரா, (அம்ப கொடுவ, பீலிகரை, தெல்தோட்ட); விஸ்தீரணம்: 0.505 ஹெக்டயார்.**

வடக்கு: காணித்துண்டு இலக்கம் 1 மற்றும் கம்சபா வீதி; கிழக்கு: கம்சபா வீதி; தெற்கு: மெதகேகில; மேற்கு: மெதகேகில.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு தெல்தோட்ட பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஆர். கே. ஹென்நாயக்க,
பிரதேச செயலாளர்,
தெல்தோட்ட.

பிரதேச செயலகம்,
தெல்தோட்ட.
2023, ஒற்றோபர் 19.

EOG 10 - 0228